**செய்தி வெளியீடு எண்: 979** **நாள்:21.12.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (21.12.2020) தலைமைச் செயலகத்தில், சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் குழந்தை பராமரிப்பு இல்லங்களில் தங்கி பயின்ற 7 இளைஞர்களுக்கு Maritime Foundation Charitable Trust மற்றும் Hindustan Institute of Maritime Training ஆகிய பயிற்சி நிறுவனங்களில் 6 மாத காலம் கடல்சார் பயிற்சியில் (General Purpose Ratings Residential Course) சேர்வதற்கான சேர்க்கை ஆணைகளையும், அவர்கள் பயிற்சி முடித்த பிறகு தனியார் கப்பல் நிறுவனங்களில் பணியில் சேருவதற்கான பணி உறுதி ஆணைகளையும் வழங்கினார்கள்.

சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் குழந்தை பராமரிப்பு இல்லங்களில் தங்கியிருந்து வீடு திரும்பிய மற்றும் பிற்காப்பு நிறுவனங்களில் தங்கியுள்ள 10 மற்றும் 12–ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களில் கல்வி, உடற்கூறு, சமூக, பொருளாதார மற்றும் குடும்ப சூழ்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட திரு.ஆர். ராஜசேகர், திரு.கே. கார்த்திக், திரு.ஆர். சக்திவேல், திரு.எஸ். சரத், திரு.எஸ். வின்செண்ட் வில்லியராஜ், திரு.ஏ. கார்த்திக், திரு. எம். கிருஷ்ணன் ஆகிய 7 இளைஞர்களுக்கு Maritime Foundation Charitable Trust மற்றும் Hindustan Institute of Maritime Training ஆகிய பயிற்சி நிறுவனங்களில் 6 மாத கால கடல்சார் பயிற்சி (General Purpose Ratings - Residential Course) பெறுவதற்கான சேர்க்கை ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இம்மாணவர்களுக்கான பயிற்சி கட்டணத்தில் இந்நிறுவனங்கள் அளித்துள்ள கட்டணச் சலுகை போக, மீதமுள்ள பயிற்சி கட்டணமான 7 லட்சம் ரூபாய் தமிழ்நாடு இளைஞர் நீதி நிதியிலிருந்து வழங்கப்படும்.

இந்த 6 மாத கால கப்பல் பயிற்சியை முடித்த பிறகு இவ்விளைஞர்களுக்கு பணி வழங்கும் வகையில், Apeejay Shipping Limited, Seven Islands Shipping Ltd., Omicron Marine Private Ltd., Transworld Ship Management Pvt. Ltd., ABS Marine Services Pvt. Ltd., ஆகிய 5 தனியார் கப்பல் நிறுவனங்கள் அளித்துள்ள பணி உறுதி ஆணைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இதன்மூலம், ஆதரவற்ற இளைஞர்கள் வணிக கப்பல்களில் பணிபுரிவதற்கு தேவையான பயிற்சியும், வேலைவாய்ப்பும் பெற்று வாழ்வில் மேன்மையுற வழிவகை ஏற்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி.சரோஜா, தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. ஆர். லால்வேனா, இ.ஆ.ப., Maritime Foundation Charitable Trust மற்றும் Hindustan Institute of Maritime Training பயிற்சி நிறுவனங்களின் நிர்வாகிகள், தனியார் கப்பல் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**